RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s2519

OPEN ACCESS

# சங்கத் தமிழரின் வேளாண் வளமைச் சடங்குகள் பண்பாட்டுப் பெருமாணங்கள்

**ச. பிரியதர்சினி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா

# Agricultural Fertility Rituals of Sangam Tamil people and their Cultural Celebrations

**C. Priyadharshini [a, *]**

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science & Higher Education for Women, Coimbatore-641043, Tamil Nadu, India

* Corresponding Author: dharshinisekaran11@gmail.com

Received: 22-08-2022
Revised: 13-10-2022
Accepted: 29-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

With land, plowing, agriculture, the age-old knowledge, relationship, labor, and feeling associated with paddy and cows are still present in the social context as agricultural cultural customs and plowing cultural traditions. Most of the cultural expressions and ritual traditions of the Tamils are symbols of the prosperity of the agricultural production process. Whatever was part of the agricultural tradition, they have been carried forward through the ages as symbols, idols, and rituals of worship.

**Keywords:** Sangam Literature, Agricultural Tradition, Rituals, Worship

## முன்னுரை

நிலத்தோடும், உழவுத்தொழிலோடும், வேளாண்மையோடும், நெல்லோடும், மாடுகளோடும் பிணைந்திருக்கிற பன்னெடுங்கால அறிவும், உறவும், உழைப்பும், உணர்வும் தான் வேளாண் பண்பாட்டு வழக்காறுகளாக உழவுப் பண்பாட்டு மரபுகளாக இன்றும் சமூக வழக்கில் இருந்து கொண்டிருக்கின்றன. தமிழர்களின் பெரும்பாலான பண்பாட்டுப் புலப்பாடுகளும் சடங்கு மரபுகளும் வேளாண்மை உற்பத்திச் செயல்பாட்டின் வளமைக் குறியீடுகளாகும். உழவுத்தொழில் மரபின் அங்கமாய் எவையெல்லாம் இருந்ததோ, அவையெல்லாம் குறியீடுகளாகவும், போலச் செய்தலாகவும், வழிபடு வாழ்த்துச் சடங்குகளாகவும் பன்னெடுங்காலமாக முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

குலச் சின்னத்திற்குரிய உணவைச் சேகரிப்பதில் காட்டும் தனி ஆர்வம் சில சிறப்புச் சடங்குகளாக வளர்ந்தன. ஏதோ ஒருவகையான பலியும் (நரபலி உட்பட) மற்ற சடங்குகளும் எவ்வளவு கண்மூடித்தனமானவையாக இருந்த போதிலும் அவை குறிப்பிட்ட உணவு அதிகமாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டன. எனவே, அவை அவ்வுணவை உட்கொண்டவர்களுடையது. (இவர்கள் மற்றவர்களை அண்டிப் பிழைப்பவர்கள் என்பது ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது). நமக்கு இத்தகைய சடங்குகள் மிக முக்கியமானவை. ஏனென்றால் இன்றைய மனிதப் பண்பாடுகளின் வித்துக்கள் இச்சடங்குகளில் உள்ளன. சிலர் மிருகங்கள் போலவும் வேறு சிலர்

வேடர்கள் போலவும் அபிநயம் பிடிக்கும் நடனம் சடங்கைக் காட்டுவதோடு நில்லாமல் வயல் வேலைகளுக்கு ஒத்திசைவாகவும் வேட்டைக்கலைக்குப் பயிற்சியாகவும் இருந்தது.

எனும் டி.டி. கோசாம்பியின் கூற்று வேளாண்மை, வேட்டை போன்றவை வளம்பெருக்கச் சடங்குகளோடு கொண்டிருந்த உறவை வெளிப்படுத்துவதாக உள்ளது. இந்த மந்திரங்களோடும் சடங்குகளோடும் பல்வேறு தொழில்களோடும் பெண்களே முதன்மையான உறவை உடையவர்களாக இருந்துள்ளனர்.

## வேளாண்மைத் தொழிலும் பெண்களும்

ஆண்களது செயல்களையும் பெண்கள் பங்கிட்டுக் கொண்டனர். இருப்பினும் பொருள் சார்ந்த கலாச்சாரத்தில் வளர்ப்பதற்கான ஆக்கப்பூர்வமான செயல்கள் தொல் பழங்காலச் சமுதாயங்கள் பெண்ணுக்குரியவையாக இருந்தன. ஆண்களுக்கு அவற்றில் பங்கேதுமில்லை. ஆரம்பத்தில் எல்லாத் தொழில்களும் வீட்டுத் தொழில்களாக இருந்தன. இவற்றைப் பெண்களே வளர்த்தனர். அவர்கள் இல்லத்தை உருவாக்கினர். வீட்டிலேயே தங்கினர் என்கிறார் தேவிபிரசாத் சட்டோபாத்யாயா. தாய்வழி எச்சங்களை ஆராய்ந்த பிரிபால்ட், நோஸலின்ட் மைல்ஸ், 'உலக வரலாற்றில் பெண்கள்' எனும் தனது நூலில் உணவு சேகரிப்பு, கூடை முடைதல் முதல் கடுங்காவல் வரையில் அனைத்துப் பணிகளும் பெண்களாலேயே செய்யப்பட்டன எனக் குறிப்பிட்டுள்ளார். இவை எல்லாம் தாய்வழிச் சமுதாய தோற்றத்தையும் இருப்பையும் அதன் அழுத்தமான தொடர்ச்சியையும் வெளிப்படுத்துகின்றன.

மேலும், பெண்கள் தான் நிலைத்தை முறையாக உழுது பண்படுத்தும் வழியைக் கண்டுபிடித்தனர். அது கடினமான தொழிலாக இருந்தாலும் இதனை நடைமுறைப்படுத்தினர். தொல் பழங்காலச் சமுதாயத்தில் மாறாத்தன்மை வலுவாக இருந்தபோதிலும் அதனால் வேளாண்மைக்கு முந்திய குழுக்களின் வட்டத்தில் இதன் எச்சங்கள் இன்றும் தொடர்ந்து இடம்பெற்றுள்ளன.

முதலாவதாகத் தோன்றிய தாய்வழி உரிமைமுறைக் கலாச்சாரத்தைச் சேர்ந்த இம்மக்கள் வேளாண்மையை மேற்கொண்டதன் காரணமாகக் காடுகளில் அலைவதை விட்டுவிட்டு முதல் குடியிருப்புகளை உருவாக்கினர் என்கிறார் தேவி பிரசாத் சட்டோபாத்யாயா. மேற்கண்ட கூற்றின் மூலமாக வேளாண்மையின் மூலவர்கள் பெண்கள் என்பதைக் காட்டுகிறது.

வேளாண்மையின் வளர்ச்சி குறித்து பேசியுள்ள நொயிலா தாப்பர், ஆண்கள் வேட்டைக்குச் சென்ற போது வீட்டிலேயே தங்கியிருந்த பெண்கள்தான் விவசாயத்தைச் செய்தார்கள் என்ற ஊகம் நம்பக்கூடியதே. வீட்டிலேயே இருந்ததானது விதையை நடுவதற்கும் நட்டதை வளர்ப்பதற்கும் வாய்ப்பைக் கொடுத்தது. மிக விரிவான மாற்றம் கலப்பை விவசாயத்தோடு வந்தது. அது மனிதர்களால் கையாளப்பட்டது எனக் குறிப்பிட்டுப் பெண்ணினத்தின் வேளாண்மை முதன்மை பற்றிய கருத்தின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தியுள்ளார். இந்த வகையில் உலகம் முழுவதுமான வரலாறுகள் பெண்களே ஆதி உழவர்கள் என்பதை நிலைநாட்டுவனவாக அமைந்துள்ளன.

## சடங்குகளும் உணவுப் பெருக்கத்தின் நம்பிக்கையும்

சடங்கும் வழிபாடும் வேளாண்மைக்கு அடிப்படையாக அமைந்திருந்தன. இதற்கான சான்றுகளைச் சங்க இலக்கியப் பதிவுகளை காணமுடியவில்லை என்றாலும் இதற்கான எச்சச் சான்றுகள் சங்க இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதைப்

'பலிபெறு கடவுட் பேணிக் கலிசிறந்து

நுடங்குநிலைப் பறவை உடங்குபீள் கவரும்

தோடிடம் கோடாய்க் கிளர்ந்து

நீடினை விளைமோ வாழிய தினையே" (Narayanasamy Iyer, 2007)

எனும் குறிஞ்சித் திணைப் பாடலில் தலைவி, என் உடம்பின் வேறுபாடு கண்ட தாய் வீட்டிலே அடைத்து வைத்து வெறியாட்டெடுப்பாள். அப்படி நான் வீட்டில் அடைக்கப்பட்டால் உன் கதிர்களைப் பறவைகள் கவர்ந்து செல்லும். அவ்வாறு கவர்ந்து செல்லாதபடி உனது தோட்டிடத்தே மறைந்துள்ள கதிர்களை, விளைந்து தலைமடங்க விடாது அவை வளரும் காலத்தை நீ நீட்டித்தல் வேண்டும் எனத் தினைப் பயிர்களை வேண்டிக் கொள்கின்றாள். பயிர்களை நேசித்து அவற்றோடு பேசி உறவுகொள்ளும் வகையிலான மனப்பாங்குடைய சமுதாயமாகச் சங்கச் சமுதாயம் இருந்ததை இப்பாடல் காட்டுகின்றது. இதனைப் பயிர்களை வேண்டிக் கொள்ளல் என்ற பழமையான வேளாண் சடங்கு மரபின் எச்சமாகக் கருத வேண்டும்.

மந்திரம் வெறும் அறியாமை எனல் தவறு அது மனோதத்துவ வகையில் செயலுக்கு வழிகாட்டியாயிற்று. ஆரம்ப கால விவசாயத்திற்கு இன்றியமையாததாயிற்று. தொடக்க காலத்தில் பெண் பயிர்த்தொழிலை ஆரம்பித்ததால் பெண்ணிற்கு முதலிடம் அளிக்கப் பெற்றது. மழை, வளம் ஆகியவற்றை வேண்டிச்செய்யப்படும் சடங்குகளில் அக்காலத்தில் பெண்கள் முதலிடம் பெற்றது இதனாலேயே எனலாம். எனும் கா. சுப்பிரமணியனின் கூற்று மழைவளச் சடங்கு பெண்ணுடன் மிகுந்த உறவுடையதாக இருந்ததை வெளிப்படுத்துகின்றது (Subramanian, 2011). ஆதிகாலச் சமுதாயங்களின் தொடர்ச்சியாக இருக்கும் மலைவாழ் மக்களின் வாழ்வில் நிகழும் மழைச்சடங்குகள் பெண்களை முதன்மைப்படுத்தியனவாக இருப்பதையும் அறியலாம்.

## மழைச் சடங்கு

வெற்றிகரமாக வேளாண்மைத் தொழிலானது நிறைவடையச் செய்ய மேற்கொள்ளப்படும் சடங்குகளில் மழையைக் கட்டுப்படுத்தச் செய்யும் சடங்குகள் முக்கியமானவை. இவை பெண்களது தனியான செல்வாக்கின் எல்லைக்கு உட்பட்டன என்கிறார் தேவிபிரசாத் சட்டோபாத்யாயா. மேலும் இந்தியா முழுவதிலும் இந்தச் சடங்கு பெண்களாலேயே நிகழ்த்தப்பட்டுள்ளது எனக்கூறி ஐரோப்பாவிலும் ஆப்பிரிக்காவிலும் பெண்கள் செய்த வழிபாட்டுச் சடங்கின் எச்சங்கள் நிலவுவதையும் எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் பெண் பூசாரினிகள் கிரேக்கத்திலும் பாபிலோனியாவிலும் அசிரியாவிலும் இருந்ததைக் காட்டியுள்ளார். பெண் முதன்மைப்பட்ட இந்தச் சடங்கு மரபினைச் சங்க இலக்கியங்களும் காட்டுவனவாக உள்ளன. பெண்கள் மழையைத் தருவிக்கும் ஆற்றல் வாய்ந்தவர்கள் எனும் பொருளுடைய,

'அருமழை தரல் வேண்டின் தருகிற்கும்

பெருமையள்'

என்னும் கலித்தொகை அடி இதற்குச் சான்றாக உள்ளது (Rasamaanikkanar, 2011).

'வறன்ஓடின் வையகத்து வான்தரு கற்பினாள்'

எனக் கற்பு வறட்சிக் காலத்தில் மழையைத் தருவிப்பதற்கான ஆற்றலை உடையது எனக் குறிப்பிட்டுள்ளது. இந்த நம்பிக்கையின் வழிப்பட்டது தான் ~பெய்யெனப் பெய்யும் மழை| என்ற வள்ளுவரின் கூற்றும் பெண்ணானவள் வேளாண்மைத் தொழிலிலும் மழைச் சடங்குகளிலும் பெற்றிருந்த முதன்மையின், செல்வாக்கின் வெளிப்பாடு ஆகும். சங்க இலக்கியப் பதிவுகளின்படி தினைப்புனக் காவல் பேரளவில் பெண்களால் செய்யப்பட்டிருந்த சங்க காலச் சூழலையும் பெண்ணானவள் உணவு உற்பத்தியில், வேளாண்மைத் தொழிலில் பெற்றிருந்த முக்கியத்துவத்தின் வெளிப்பாடாகும். பெண்கள் மனித இன உற்பத்தியின் மூலவர்கள், ஆதாரமானவர்கள் எனும் நிலையில் வளத்தின் அடையாளமாகத் திகழும் பெண்கள் மேற்கொள்ளும் காவல், தினை முதலான வேளாண் விளைச்சல்களைப் பெருக்கும் என்ற சிந்தனை மரபின் தொடர்ச்சியாகவும் இந்த தினைப்புனக் காவலையும் கருத வேண்டும்.

வேளாண்மைத் தொழிலுக்கு உதவும் பல்வேறு இடுபொருட்களுள் தண்ணீரே முதன்மையானது. நீரும் நிலமும் சேர்ந்தால்தான் உணவு கிடைக்கும். மண் இல்லாமலேயே பயிர் வளர்த்த அறிவியல்

உதவுகிறது. ஆனால் நீரில்லாமல் எதுவும் விளைய முடியாது. உலகில் உள்ள மொத்த நீரின் அளவு பல கோடி ஆண்டுகளாக மாறாமல் உள்ளது. நீர் வளத்தை உற்பத்தி செய்ய முடியாது.

நீர்ச்சுழற்சி என்ற முறையில் கடல்நீர் சூரிய வெப்பத்தில் ஆவியாகி, மேகமாக வான் சென்று, பின் அதுவே மழையாகப் பொழிந்து, ஆறுகளில் ஓடி மீண்டும் கடலில் கலக்கிறது. இதுவே நீரின் சிறப்பாகும். கடல் நீர் வேளாண்மைக்கு உகந்தது அல்ல. மழைநீர் தான் வேளாண்மைக்கு உகந்தது. நிலத்தில் பெய்திடும் மழைநீர் தான், பல்வேறு நீர் ஆதாரப் பகுதிகளில் சேமிக்கப்படுகிறது. இத்தகைய மழைநீரே நிலத்தடியில் மறைநீராகவும் சேமிப்பாகிறது. மறை நீருக்கும் மழைநீரே வித்தாகும். மழைநீரும் நிலத்தடி நீர் எனும் மறைநீரும் தான் இருபுனல் எனப்படுகிறது. மலை மற்றும் காட்டுப் பகுதிகளில் பெய்த மழைப் பொழிவினால் ஆறுகளாகப் பெருகி வரும் நீரே வரு புனல் எனப்படுகிறது.

இத்தகைய இரு புனலும் வருபுனலும் தான் வேளாண்மைத் தொழிலுக்கு உகந்தவை ஆகும். அதனால்தான்

“இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்

வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு”

என்கிறார் வள்ளுவர் (Puliyur Kesigan, 2009).

'நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்

வானின்று அமையாது ஒழுக்கு"

என்னும் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப மறை நீர் எனும் நிலத்தடி நீருக்கும் ஆற்று நீருக்கும் மழை நீரே ஆதாரமாகும். இத்தகைய மழை நீரே அனைத்து உயிரினங்களுக்கும் தேவையான உயிர் ஆதாரமாகவும் திகழ்கிறது.

வேளாண்மைத் தொழிலுக்கு வேண்டிய ஆதாரமாகவும் திகழ்வது மழைதான். மழை இல்லாவிட்டால், வேளாண்மைத் தொழிலே நடக்காது. மழை என்னும் செல்வத்தின் வளம் குறையுமானால், உழவர்கள் ஏர் கொண்டு உழ முழயாது என்பதை,

'ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்

வாரி வளம் குன்றிக் கால்"

எனகிறார் வள்ளுவர் (Puliyur Kesigan, 2009). ஆகவேதான், வயலும் வயல்சார்ந்த நிலப்பகுதியில் உழவுத்தொழில் புரிந்த வேளாண் மரபினர், வேளாண்மைக்குப் பெரிதும் உகந்ததாய் அமைந்த மழையைத் தெய்வமெனத் தொழுதுள்ளனர்.

“இரு விசும்பு அதிர மின்னிக்

கருவி மாமழை கடல் முகந்தனவே”

“முழங்கு கடல் முகந்த கமல்சூல் மாமழை"

“கடல் முகந்து கொண்ட கமல்சூல் மாமழை"

“மால்கடல் குடிக்கும் மழைக்குரல்” (Sudhakar, 1990)

எனும் சங்கப் பாடல் அடிகள் முன் பழந்தமிழ்க் காலம் தொடங்கிப் பின் பழந்தமிழ்க்காலம் வரையிலான சங்கச் சமுதாயத்தில் மேகம், கடல் நீரை முகந்து வந்து மழையாகத் தருவது எண்ணம் நிலவிய நிலையைக் காட்டுகிறது.

மேகம் தருவதே மழை என்ற சிந்தனை இருந்தாலும் அதைக் கட்டுப்படுத்த முடியும் என்ற சிந்தனையும் அதற்கான வழிபாட்டு மரபும் சங்ககால இனக்குழு மக்களிடம் இருந்துள்ளது. வேளாண் சடங்காக மழைச்சடங்கு நிகழ்ந்ததைப் பின்வரும் பாடல் வெளிப்படுத்துகிறது.

“மலைவான் கொள்கென உயர்பலிதூஉய்

மாரியான்று மழை மேக்கு உயர்கெனக்

கடவுட் பேணிய குறவர் மாக்கள்

பெயல்கண் மாறிய உவகையர்" (Avvai Duraisamy Pillai, 1968)

எனும் பாடலின் வழி மலையில் மேகங்கள் தவழ்ந்து மழைபெய்ய வேண்டும் எனப் பலி கொடுத்தமை, போதுமான மழை பொழிந்தபின்னர் மேகம் மேல்நோக்கி உயரவேண்டும் எனக் கடவுளை வழிபட்டமை, மழை மாறிய நிலையைக் கண்டு குறவர் மகிழ்ந்தமை எனும் நிலைகளைக் காட்டுகின்றது. மந்திரச் சடங்கும் கடவுள் வழிபாடும் இணைந்த நிலையில் மழை வேண்டப்பட்ட சங்கச் சமுதாய நிலையைக் காட்டுகின்றது.

மழை வேண்டிச் சடங்கு வழிப்பட்ட இறைவழிபாடு குழுவினரால் நிகழ்த்தப்பட்ட பாடல் ஒன்றும் நற்றிணையில் இடம்பெற்றுள்ளது.

"அமர்க்கண் ஆமான் அருநிறம் முள்காது

பணைத்த பகழிப்போக்கு நினைந்து கானவன்

அணங்கொடு நின்றது மலைவான் கொள்கென

கடவு ளோங்குவரை பேண்மார் வேட்டெழுந்து

கிளையொடு மகிழும் குன்ற நாடன்"

எனும் பாடலடிகளில் வேட்டையில் அம்பு தப்பிப் போனமைக்குக் கடவுளின் கோபமே காரணம் எனக் கருதிய குறிஞ்சி நிலக் கானவன் மழையால் அந்தக் கடவுளின் வெம்மை தணியுமெனக் கருதிக் கடவுளின் கோபத்தைப் போக்கத் தன் குழுவினருடன் மழை வேண்டி நிகழ்த்திய வழிபாடானது பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஐங்குறுநூற்றிலும்,

"குன்றக் குறவ னாப்பி னெழிலி

நுண்பல் வழி துளி பொழியும் நாட"

என மழை வேண்டி மலைவாழ் குறவன் ஆர்ப்பரித்துக் குரல் எழுப்பியபோது மழை பெய்தது என்பதையும், இந்தச் சடங்கு பெரும்பாலும் காட்டுவழிபாட்டுச் சடங்காக இறைவழிபாட்டுடன் தொடர்புடையதாக மாறிப் போன நிலையில் வெளிப்படுத்துகிறது.

## முடிவுரை

சடங்கு மரபு பெண்களிடம் இருந்து ஆணுக்கு மாறிய நிலையில் அது பின்னர் பரவலாக இடம்பெற்று ஆளுமை செலுத்திய இறைவழிபாட்டுச் சூழலில் மழையைத் தருவது கடவுள் என்ற நம்பிக்கையாக மாறுகின்றது. இவ்விதமாய் வேளாண்மை சார்ந்து நிகழ்த்தப்படும் வலிமைச் சடங்குகளும், மழைவளச் சடங்குகளும், உழவுச் சடங்குகள், விதைப்பு மற்றும் நடவுச் சடங்குகள், அறுவடைச் சடங்குகள் போன்றவை மிக நுண்ணிய பண்பாட்டு வரலாற்று மரபைக் கொண்டிருப்பவையாகும்.

## References

Avvai Duraisamy Pillai, S. (1968) Purananuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Narayanasamy Iyer, A. (2007) Nattrinai Moolamum Uraium, Saiva Siddhanta Works Publishing Society, Chennai, India

Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India.

Rasamaanikkanar, M. (2011) Kaliththogai, Poombukar Publication, Chennai, India

Subramanian, K. (2011) Sangakala Samuthayam, New Century Book House, Chennai, India

Sudhakar, V. (1990) Pathupattu, Varthaman Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License